**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## அவசரக் கூட்டப்பொருள்

2012ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ஆம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 26.09.12 | 1. தூத்துக்குடி மாநகராட்சியில் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் பதவியேற்று ஓராண்டு காலம் 25.10.2012ல் நிறைவு அடைகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மேற்படி நிறைவு தினத்தை முன்னிட்டும், தூத்துக்குடி மாநகரினை பசுமை நிறைந்ததாகவும், மாசு மற்றும் உலக வெப்பமயமாதல் போன்ற இயற்கை நிகழ்வுகளில் இருந்து இம்மாநகரத்தை பாதுகாக்கின்ற வகையிலும், பருவ காலங்களில் பெய்யும் மழை வளத்தினை அதிகரிக்கும் வகையிலும் இம்மாநகராட்சியின் 60 வார்டுகளிலும் 6400 மரக்கன்றுகளை நடுவதற்கும் தொடர்ந்து அதனை பராமரித்து வருவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**: மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>இ5/ 18419/2012 | 189) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 2. தூத்துக்குடி மாநகராட்சி செல்வநாயகபுரம் தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் சர்வே வார்டு 4 பிளாக் 32 பி நகரளவு எண். 5ல் 49.21 ச.மீ. பரப்பளவு இடமும் நகரளவு எண். 99ல் 3924.5 ச.மீ. பரப்பளவு இடமும் நகரளவு எண் 95ல் 3302.5 ச.மீ. பரப்பளவு இடமும் ஆக மொத்தம் 12148.ச.மீ. இடம் உள்ளது. மேற்படி இடத்தில் தற்போது துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு அமைந்துள்ளது.<br><br>மாநகராட்சி குடியிருப்பில் குடியிருந்து வரும் துப்புரவு பணியாளர்களின் கட்டிடம் மிகவும் பழைமை வாய்ந்ததாக உள்ளதால் மேற்கண்ட கட்டிடங்களை இடித்துவிட்டு புதியதாக அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்ட ஏதுவாக மேற்படி மனைப்பிரிவு மனைகளை ஒருங்கிணைப்பு செய்து நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப அங்கீகாரம் ம.வ./ந.ஊ.இ. எண். 115/2010ன் நாள் 3.01.2011ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.<br><br>தற்போது மேற்கண்ட இடத்தில் மாநகராட்சி சார்பில் துப்புரவு பணியாளர்களுக்கு முதல் கட்டமாக ரூ 100 லட்சம் மதிப்பீட்டில் குடியிருப்புக் கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் மேற்படி கட்டுமானத்திற்கு வடிவமைப்பு வரைபடம் ஒப்புதல் (Civil design) நகர ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களிடம் பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள | 190) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்/ 17712/09

3. தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள செயற்பொறியாளர் அறையில் உள்ள TOSHIBA e-studio 305 DIGITAL COPIER bearing serial No.CMDO 19043 என்ற நகல் எடுக்கும் இயந்திரத்துக்கு வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் முடிவடைந்து விட்டதால் 2012–2013ம் ஆண்டுக்கு மேற்படி இயந்திரத்துக்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டி உள்ளது.

191) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

எனவே கீழ்க்காணும் விவரப்படி மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | மெசர்ஸ் ஹெச்சிஎல் இன்போ சிஸ்டம்ஸ் லிமிடெட், மதுரை–20 | ரூ.22472.00 (சேவை வரி சேர்த்து) |
| 2. | மெசர்ஸ் அல்ட்ரா பவா சொலூசன்ஸ், மதுரை–12 | ரூ.24000/– (சேவை வரி சேர்த்து) |
| 3. | மெசர்ஸ் வி.எல்.டிரேடிங் கோ, மதுரை 16 | ரூ. 25000/– (சேவை வரி சேர்த்து) |

மேற்படி மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகளில் மெசர்ஸ் ஹெச்.சி.எல். இன்போ சிஸ்டம்ஸ் லிமிடெட் (M/s, HCL Info Systems Limited) நிறுவனத்தினர் மற்ற நிறுவனங்களை விட மிகக் குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.22472/–க்கு கொடுத்துள்ளனர்.

எனவே மேற்படி நிறுவனத்தினரின் மேற்படி மிகக்குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொண்டு, மேற்படி நிறுவனத்தினருக்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்யும் வகைக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கும், மேற்படி விலைப்புள்ளி தொகை ரூ.22,472/–ஐ மேற்படி நிறுவனத்தினருக்கு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ5/17108/12

4. தூத்துக்குடி மாநகராட்சியில் வரி வசூல் செய்வதற்கும் பயோமெட்ரிக் சிஸ்டத்தில் மாநகராட்சி பணியாளர்களின் வருகையினை பதிவு செய்வதற்கும், பயன்படுத்தப்பட்டு வரும் கையடக்கமான கருவிகளுக்கு வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் முடிவடைந்துவிட்டதால் 2012–2013ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்யவேண்டியுள்ளது.

192) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

மேற்படி கருவிகளுக்கு கீழ்க்காணும் விவரப்படி வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்வதற்கு மெசர்ஸ் பாண்ட் வல்லே டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (M/S Band Valley Technologies Pvt. Ltd.) நிறுவனத்தினர் கீழ்க்கண்ட விவரப்படி மேற்படி கையடக்கமான கருவிகளுக்கு உரிய விலைப்புள்ளி தொகை ரூ 580890–00 க்கு கொடுத்துள்ளனர்.

| வ.எண் | இயந்திரம் விவரம் | எண்ணிக்கை | வருடாந்திர பராமரிப்புக்கு உரிய தொகை |
|---|---|---|---|
| 1 | கையால் இயக்கும் இயந்திரம் (இன்வாயிஸ் எண்.10 நாள் 28–12–2010 | 10 எண்ணம் | 289950.00 (இன்வாய்ஸ் தொகையில் 50 சதவிகிதம் மதிப்பு) |

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td></td><td>பட்டியல் மதிப்பு ரூ 579900—00)</td><td></td><td></td></tr>
<tr><td>2</td><td>பயோ மெட்ரிக் இயந்திரம் (இன்வாய்ஸ் எண்.12 நாள் 28—12—2010 பட்டியல் மதிப்பு ரூ 581880—00</td><td>12 எண்ணம்</td><td>290940.00 (இன்வாய்ஸ் தொகையில் 50 சதவிகிதம் மதிப்பு)</td></tr>
<tr><td></td><td></td><td>மொத்தம்</td><td>580890—00</td></tr>
</table>
மேற்படி மெசர்ஸ் பாண்ட் வல்லே டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் தான் முன்பு மேற்படி கையால் இயக்கும் இயந்திரஙகள் 10 எண்ணம் மற்றும் பயோ மெட்ரி. இயந்திரங்கள் 12 எண்ணம் ஆகியவற்றை இம்மாநகராட்சி அலுவலகத்திற்கு விநியோகம் செய்துள்ளனர்.
எனவே அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொண்டு மேற்படி நிறுவனத்தினருக்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்யும் வகைக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கும் மேற்படி விலைப்புள்ளி மொத்த தொகை ரூ 580890 மேற்படி நிறுவனத்தினருக்கு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
இ5/17345/12
</td><td></td></tr>
<tr><td></td><td>5.</td><td>
இம்மாநகராட்சி திரேசபுரம் மாதவர் காலனி கிழக்கு பகுதியில் குடிநீர் விநியோகம் பாதிப்படைந்ததை புதிய பகிர்மான குழாய் பதித்து குடிநீர் விநியோகம் சீரமைக்க மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 55,000/— செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<u>அலுவலகக் குறிப்பு</u>: மாமன்றம் பதிவு செய்யலாம்.
ம.ப.எண்.104/12—13
</td><td>193) பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td></td><td>6.</td><td>
இம்மாநகராட்சி, பராமரிப்பில் உள்ள வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம் மற்றும் வல்லநாடு தெப்பம் பகுதியிலுள்ள குடிநீர் பணியாளர்களின் குடியிருப்புகள் மிகவும் சேதமடைந்த நிலையில் பயன்பாட்டில் இல்லாமல் இருப்பதால், வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் இரண்டு குடியிருப்பு (Block) மற்றும் வல்லநாடு தெப்பம் பகுதியில் ஒரு குடியிருப்பு (Block) (மொத்தம் 6 குடியிருப்புகள்) கட்டுவதற்கு 2012—13 ஆண்டு விலைவிகிதப்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.21,00,000/—க்கு மாமன்றத்திற்கு பொருள் வைத்து அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலகக் குறிப்பு</u>: அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினம் குடிநீர் கணக்கு தலைப்பின்கீழ் செலவு செய்யவும் அனுமதிக்கலாம்.
மதிப்பீடு எண் 15/2011—12
</td><td>194) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>7.</td><td>
இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் ஆண், பெண் துப்புரவு பணியாளர்கள், மலேரியா பணியாளர்கள், வாகன ஓட்டுநர்கள், துலக்குனர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள், மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு 2012ம் ஆண்டுக்கான சீருடை மற்றும் தையற்கூலி வழங்கப்பட வேண்டும். அரசாணை எண் 283 நாள் 28.06.1996ன்படி, துணி வகைகளை 50% கோ.ஆப்டெக்ஸ் நிறுவனத்திலும், 50% தமிழ்நாடு கதர் கிராம வாரியத்திலும் வாங்குவதற்கும் அதற்கான உத்தேச
</td><td>195) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>செலவினமாக தொகை ரூ.8.00 (எட்டு இலட்சம் மட்டும்) இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u>: அனுமதிக்கலாம்.<br><br>எச்4/17587/2012</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>8. இம்மாநகராட்சி பகுதி திரவியபுரம், பொன்னகரம், அழகேசபுரம் மற்றும் முத்துகிருஷ்ணாபுரம் பகுதிகளுக்கு வி.வி.டி. மேல்நிலைத் தொட்டியிலிருந்து பக்கிள் ஓடை பாலத்தின் வழியே செல்லும் 300 மி.மீ. மற்றும் 150மி.மீ. விட்டமுடைய குழாய்களில் கசிவு ஏற்பட்டு குடிநீர் விநியோகம் மேற்படி பகுதிகளுக்கு பாதிப்படைந்து வருவதை சரி செய்து சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ள மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.241810/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u>: மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>மதிப்பீடு எண் 134/12–13</td>
<td>196) பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>9. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் கடிதத்தில் தூத்துக்குடி மாநகராட்சி மீளவிட்டான் முருகேசன் நகர் பகுதியில் கிராம இளைஞர்கள் விளையாட்டு மேம்பாட்டுத் திட்டம் (PYKKA) பைக்கா திட்டம் (2008–09)ன்படி கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ளுவதற்கு தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ5/542/2012–2 நாள் 28.06.2012ன்படி ரூ.3.75 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>பணி விவரம்</th><th>மதிப்பீடு தொகை</th></tr>
<tr><td>1</td><td>மீளவிட்டான் முருகேசன் நகர் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைத்தல்</td><td>ரூ. 3.75 இலட்சம்</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு</u>: மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>மதிப்பீடு எண் 116/12–13</td>
<td>197) பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>10. இம்மாநகராட்சி உள்கட்டமைப்பு ஈடு செய்யும் நிதி 2011–12 திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள “Supply delivery and erection of 320 KVA sound Proof D.G. set” என்ற பணிக்கு மாமன்ற தீர்மானம் 47 நாள் 30.03.2012ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 29.08.2012 அன்று கோரப்பட்ட மூன்றாவது அழைப்பு ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் தொழில்நுட்ப ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு தகுதியுடைய Indra Power Solutions சென்னை நிறுவனத்தின் விலைப்புள்ளி 10.09.2012 அன்று திறக்கப்பட்டது. அதன் ஒப்பு நோக்கு பட்டியல்<br><br>1) Indra Power Solution — மதிப்பீட்டை விட 1.85% அதிகம் (ரூ.3300000/–)<br><br>மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட Indra Power Solution நிறுவனத்தினரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் 11.09.2012 அன்று கடிதம் மூலம் விலைக்குறைப்பு கொடுத்துள்ளார். அதன் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u>:<br><br>மேற்படி பணிக்கு Indra Power Solution, சென்னை நிறுவனத்தினர்</td>
<td>198) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மதிப்பீட்டை விட 0.06% குறைவாக (ரூ.3238000/–) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் 71/12–13 | |
| | 11. தூத்துக்குடி மாநகரில், கடற்கரை மைதானத்தில் அரசுப் பொருட்காட்சி 06.09.2012ம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. மொத்தம் 45 நாட்கள் நடைபெற உள்ளது. மேற்படி பொருட்காட்சியில் பங்கேற்பதற்கு பதினைந்து அரசுத் துறைகளுக்கும், ஆறு அரசு சார்பு நிறுவனங்களுக்கும், தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. மேற்படி அரசுத் துறைகளும், அரசு சார்பு நிறுவனங்களும் தங்கள் சார்பில் அரங்குகள் அமைத்து பொருட்காட்சியில் பங்கேற்றுள்ளன. நமது மாநகராட்சி சார்பில் பொருட்காட்சியில் அரங்கு அமைக்கப்பட்டு, அரங்கில் அரசு நலத்திட்ட உதவிகள், அரசு மூலம் கிடைக்கக்கூடிய பலதரப்பட்ட உதவிகள் மற்றும் திட்டங்கள் பற்றிய விவரங்கள் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் வண்ணம் வண்ணப் புகைப்படங்கள் மாதிரி வடிவங்கள் ஆகியவை வைக்கப்பட்டுள்ளன.<br><br>மேலும் அரசு செய்தி–மக்கள் தொடர்பு துறை, சென்னை–9 அலுவலகத்தில் இருந்து நமது மாநகராட்சி சார்பில் மேற்படி அரங்கு அமைக்கப்பட்டமைக்கு உரிய கட்டணம், மின்சாரக் கட்டணம், முன்வைப்புத் தொகை ஆகிய அனைத்து கட்டணங்களையும் சேர்த்து வரும் மொத்த தொகை ரூ.22368/–க்கு 18.09.2012ம் தேதிய 223ம் எண் செலவினப் பட்டியலை இம்மாநகராட்சிக்கு அனுப்பி உள்ளார்.<br><br>எனவே மேற்படி செலவினப் பட்டியலில் கண்டுள்ள தொகை ரூ.22368/–ஐ செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அலுவலகத்திற்கு செலுத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>இ5/17019/12 | 199) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 12. தூத்துக்குடி மாநகராட்சி ராஜாஜி பூங்கா நீரேற்று நிலையத்தினுள் லாரியில் தண்ணீர் நிரப்ப அமைக்கப்பட்டுள்ள குழாய்களில் வால்வு பொருத்தி தொட்டி அமைக்க மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ. 52,474/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br><br>மதிப்பீடு எண் 140/12–13 | 200) பதிவு செய்யப்பட்டது |
| | 13. தூத்துக்குடி மாநகராட்சி, மீளவிட்டான் பகுதி வார்டு எண் 34, 48, 49 ஆகிய பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ள, கோரம்பள்ளம் பகுதியிலுள்ள குளத்தில் ஒரு கிணறு அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.15.50 இலட்சத்திற்கு மாமன்றத்திற்கு பொருள் வைத்து அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** அனுமதிக்கலாம். மேற்கண்ட தொகையினை குடிநீர் வைப்பு நிதியிலிருந்து வழங்கலாம்.<br><br>மதிப்பீடு எண் 153/12–13 | 201) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 14. | தூத்துக்குடி மாநகராட்சி 35வது வார்டு P & T காலனி பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் பகிர்மான குழாய் பக்கிள் ஓடையில் தடுப்பு சுவர் கட்டும் பணிக்காக மாற்றியமைக்க மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 24,897/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>மதிப்பீடு எண் 117/12–13 | 202) பதிவு செய்யப்பட்டது |
| | 15. | இம்மாநகராட்சி உள்கட்டமைப்பு ஈடு செய்யும் நிதி 2011–12 திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள "Laying of 350mm Ductile iron pumping main from collector well to Ridge point" என்ற பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் செயல்முறை ஆணை ந.க.எண் 16897/2012/தி2 நாள் 14.05.2012ன்படி நிர்வாக அனுமதியும், மாமன்ற தீர்மானம் எண் 47 நாள் 30.03.2012ன்படி ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு இரண்டு முறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் வரப்படவில்லை. மேற்படி பணிக்கு 14.09.2012 அன்று கோரப்பட்ட மூன்றாவது அழைப்பு ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தொழில்நுட்ப தகுதியுடைய ஒரு ஒப்பந்தப்புள்ளியான "Classic Engineering enterprises" கோயம்புத்தூர் நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியின் விலைப்புள்ளி 20.09.2012 அன்று திறக்கப்பட்டது. மேற்படி விலைப்புள்ளி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 2012–13ஆம் ஆண்டு விலை விகிதப்பட்டியலுடன் இணைத்து தயாரிக்கப்பட்ட ஒப்பு நோக்கு பட்டியல்<br><br>1) Classic Engineering enterprises கோயம்புத்தூர் — மதிப்பீட்டை விட 5.45% அதிகம்<br><br>மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள "Classic Engineering enterprises'' நிறுவனத்தினரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் 21.09.2012 அன்று கடிதம் மூலம் விலைக்குறைப்பு கொடுத்துள்ளார். அதனடிப்படையில் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:**<br><br>மேற்படி பணிக்குரிய மதிப்பீடு பட்டியல் 2011–12ம் ஆண்டு விலைவிகிதத் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு இரண்டு தடவை ஒப்பந்தப்புள்ளி கோரப் ஒப்பந்தப்புள்ளியும் பெறப்படவில்லை. மூன்றாவது முறை கோரப்பட்ட ஒப்பந்தப்புள் ஒப்பந்தப்புள்ளிப் பெறப்பட்டுள்ளது. பொறியியல் கையேடு Chapter X, பத்தி 10- ஒப்பு நோக்குப் பட்டியல் நடப்பு விலை விகிதத்தின்படி தயார் செ தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அதனடிப்படையில் தற்போது மூன்றாவது மு மேற்கண்ட பணிக்கு ஒப்பு நோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதில், மதிப்பீட அதிகமாக உள்ளது. பொறியியல் கையேடு பத்தி எண் 2.7.2ன்படியும், திட்டப்பணியாக இருப்பதால், குடிநீர் அவசர அவசியம் கருதி உடனே வேண்டியிருப்பதால் மேற்படி பணிக்கு Classic Engineering enterprises மதிப்பீட்டை விட கூடுதலாக 4.93% (ரூ.25409492.10) கொடுத்துள்ளதை மாமன அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் 20433/2012/DO நாள் 19.06.2012 | 203) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 16. | தூத்துக்குடி மாநகராட்சி எட்டையாபுரம் ரோடு கதவு எண். 109/1/1, 109/1/2 மற்றும் 109/1/3 நகரளவு வார்டு B பிளாக் 13 நகரளவு எண். 79 பகுதி, 86 பகுதியிடத்தில் புதியதாக தேங்காய் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை 116 H.P மின்மோட்டார் இயந்திரங்கள், நிறுவுவதற்கு அனுமதி கோரி திரு.M.V.முத்துராஜன் மற்றும் திரு. M.V. முத்துகுமார் ஆகியோரின் விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | 204) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

**அலுவலகக் குறிப்பு:**

மனுதாரர் 116 H.P மின்மோட்டார் இயந்திரங்கள் நிறுவுவதற்கு அனுமதி கோரியுள்ள இடம் நகரமைப்பு வரைவு நிலை விரிவு அபிவிருத்தி திட்டம் 'H' ல் கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்சாலை நில உபயோகப் பகுதியாக உள்ளது. நகர் நல அலுவலர் (பொ) அவர்களின் 16.8.2012ம் தேதிய அறிக்கை மற்றும் நகரமைப்பு அலுவலர் (பொ) 24.8.2012ம் தேதிய அறிக்கைகளின் படி மேற்கண்ட இடத்தில் 116 குதிரைதிறன் கொண்ட மின்மோட்டார் இயந்திரங்கள் நிறுவுவதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

எப்1. 19017/2010

17. இம்மாநகராட்சி அலுவலகத்திற்குள் கண்காணிப்பு கேமராக்கள் (DAY/NIGHT DOME IR CAMERA) 9 எண்ணமும் அதனை நிறுவுவதற்கான உபசாதனங்கள் மற்றும் பணிகளான 1) STANDALONE BOX 2) HARD DISK DRIVE, 3) POWER SUPPLY பணிகள் ஆகியவற்றை அமைக்கவும் ஆகும் மொத்த உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/— தொகைக்கும், மேற்படி கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் உப சாதனங்களை வாங்கி, மாநகராட்சியில் முக்கியமான இடங்களில் அமைப்பதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ5/18420/12

205) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

18. தூத்துக்குடி மாநகராட்சி சார்பாக, தென்கொரியா நாட்டின் தலைநகர் சியோல் நகரத்தில் வைத்து நடைபெறும் வானிலை மாற்றம் சம்பந்தமான மாநாட்டில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் கலந்து கொள்ள உலக மேயர் கவுன்சில் சார்பாக அழைப்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி மாநாட்டில் இம்மாநகராட்சி சார்பில் வணக்கத்திற்குரிய மேயர் திருமதி. எல்.சசிகலா புஷ்பா அவர்கள் கலந்து கொள்வதற்கான அனுமதி மற்றும் மேற்படி பயணத்திற்கான செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** அரசு கடித எண் 28706/Ele/2011/1.ந.நி.ம.கு.வ.துறை நாள் 25.11.2011ம் தேதிய சுற்றறிக்கை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண் 50263/2011/MCA1 நாள் 12.12.2011 சுற்றறிக்கையின்படி வெளிநாடுகளுக்கு செல்ல அரசு அனுமதி பெற்று கலந்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அரசு அனுமதி பெற மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

சி1/18424/2012

206) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

19. இம்மாநகராட்சி பகுதியில் ஒருங்கிணைந்த நகர்புற குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பூபாலராயர்புரம் பகுதியில் புதிதாக இன்பார்மல் மார்க்கெட் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள விவரப்படி கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | கடை விபரம் | கடை அளவு விபரம் |
|---|---|---|
| 1 | மட்டன் மார்க்கெட் | 10.51மீ x 5.10 மீ |
| 2. | காய்கறி மார்க்கெட் | 21.25 மீ x 5.10 மீ |
| 3. | மீன் மார்க்கெட் | 21.25 மீ x 5.10 மீ |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள விவரப்படி கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் தயார் செய்ய மாநகராட்சி பொது ஏல

207) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | நிபந்தனை விதிகளின்படி பொது ஏலம் நடத்தவும் அதன் வகைக்கு ஏற்படும் செலவினங்களுக்கும் மன்ற அனுமதி அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ16/18429/2012 | |
| | 20. | தூத்துக்குடி மாநகராட்சி பாளையங்கோட்டை ரோடு மேற்கில், பகுதி 2 திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள எரிவாயு தகன மேடையை பராமரிக்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (ந.நி.3) அரசாணை எண் (நிலை) 238 நாள் 13.11.2008ல் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தூத்துக்குடி மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 135 நாள் 25.06.2009ன்படி மூன்று ஆண்டுகளுக்கு உமேஷ் சாரிடபிள் டிரஸ்ட் தூத்துக்குடி ஸ்தாபனத்திற்கு எரிவாயு தகன மேடையை பராமரிக்க அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் அவ்வப்போது நடைமுறையில் வகுக்கப்படும் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>உமேஷ் சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட மூன்றாண்டு கால அனுமதி நிறைவு பெற்றுள்ளது. தற்போது 1) உமேஷ் சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனத்தாரின் 26.07.2012ம் தேதிய மனுவில் மீண்டும் எரிவாயு தகன மேடையை பராமரிப்பு செய்யும் பணியினை நீட்டிப்பு செய்து அனுமதி வழங்க கோரியுள்ளார். 2) சூர்யா அறக்கட்டளை மேனேஜிங் டிரஸ்டி திரு. பாலாஜி என்பவரின் 27.08.2012ம் தேதிய மனுவில் எரிவாயு தகன மேடை பராமரிக்கும் பணியை தங்களது அறக்கட்டளை சார்பாக நடத்த அனுமதி கோரியுள்ளார். 3) அன்பு மனிதம் அறக்கட்டளை நிறுவனத்தலைவர் திரு. பி. சரவணக்குமார் என்பவரின் 27.08.2012ம் தேதிய மனுவில் தமது அறக்கட்டளை சார்பாக எரிவாயு தகன மேடை பராமரிக்கும் பணியை நடத்த அனுமதி கோரியுள்ளார்.<br><br>மேற்கண்ட மூன்று விண்ணப்பங்கள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: பாளைரோடு மாநகராட்சி நவீன எரிவாயு தகன மேடையை பராமரிப்பு செய்ய அனுமதி கோரியுள்ள உமேஷ் சாரிட்டபிள் டிரஸ்ட், சூர்யா அறக்கட்டளை நிறுவனம் மற்றும் அன்பு மனிதம் அறக்கட்டளை நிறுவனம் ஆகிய மூன்று நிறுவனங்களில் ஏதேனும் ஒன்றை மாமன்றம் பரிசீலனை செய்து அனுமதி வழங்கலாம்.<br><br>இ1/17234/06 | 208) இப்பொருள் ஒத்தி வைக்கத் தீர்மானிக்கப்பட்டது |
| | 21. | இம்மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு ஆணையர் குடியிருப்பை மேயர் பங்களாவாக மாற்றம் செய்யப்படுவதால் டூவிபுரம் 6வது தெருவில் உள்ள இம்மாநகர பொறியாளர் இல்லத்தின் அருகில் உள்ள காலியிடத்தில் புதியதாக ஆணையர் இல்லம் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.40.00 இலட்சத்திற்கு மாமன்றம் பொருள் வைத்து அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட செலவினம் திருத்திய வரவு செலவு திட்டத்தின் கீழ் சேர்க்கலாம்.<br><br>ம.ப.எண் 158/12–13 | 209) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 22. | இம்மாநகராட்சிப் பகுதி டூவிபுரம் 5ம் தெருவில் உள்ள ஆணையர் குடியிருப்பை மேயர் பங்களாவாக மாற்றவும், மேலும் கூடுதல் கட்டிடம் தரைத்தளம் மற்றும் முதல் தளம் விரிவுபடுத்தி கட்டவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.60.00 இலட்சத்திற்கு மாமன்றத்திற்கு பொருள் வைத்து அனுமதி வேண்டப்படுகிறது. | 210) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட செலவினம் திருத்திய வரவு செலவு திட்டத்தின் கீழ் சேர்க்கலாம்.<br><br>ம.ப.எண் 157/12–13 | |
| | 23. தூத்துக்குடி மாநகராட்சியில் தற்போது மேற்கு மண்டலத்திலுள்ள வார்டு 40 மற்றும் 41 வடக்கு மண்டலத்திலுள்ள வார்டு 12ல் பகுதி மற்றும் கிழக்கு மண்டலத்தில் உள்ள வார்டுகள் 21, 24 மற்றும் 26 ஆகிய வார்டுகளின் பகுதி முதலியவற்றில் தற்போது மாநகராட்சி மூலம் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், புதிதாக பணியாளர்கள் நியமனம் செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டால் கூடுதல் செலவீனம் ஏற்படுமென்பதாலும், மாநகரின் தூய்மை மற்றும் சுகாதார பராமரிப்பினை கருத்தில் கொண்டு மேற்கண்ட 2 முழு வார்டுகள் மற்றும் 4 பகுதி வார்டுகள் மட்டும் தனியார் மூலம் பராமரிப்பு செய்திடவும் அதற்கான செலவினத் தொகை உத்தேசமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.81.00 லட்சங்களுக்கும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** அனுமதிக்கலாம்.<br><br>எச்1/18432/2012 | 211) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 24. தூத்துக்குடி மாநகராட்சியானது, 05–08–2012 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, 25–10–2011ம் தேதியன்று உள்ளாட்சி அமைப்பு தேர்தல்கள் நடைபெற்று தற்போது 60 வார்டுகள் உள்ளடங்கிய மாநகராட்சியாக முழு அளவில் செயல்பட்டு வருகிறது. தற்போது இம்மாநகராட்சி நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியுடன் அத்திமரப்பட்டி, முத்தையாபுரம், சஙகரப்பேரி, மீளவிட்டான் மற்றும் தூத்துக்குடி ரூரல் என்ற ஐந்து கிராம ஊராட்சிகள் இணைக்கப்பட்டுள்ளது.<br><br>இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட ஐந்து கிராம பஞ்சாயத்துகளிலும் நிலையான பணியாளர்கள் யாவரும் பணியாற்றவில்லை. மேலும் தூத்துக்குடி நகராட்சியாக இருந்தபோது 2008ல் அனுமதிக்கப்பட்ட 851 பணியிடஙகளில் 262 பணியிடஙகள் காலியாக இருந்தது. எனவே மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு ஐந்து கிராம ஊராட்சி பணிகளையும் இணைத்து பணிகள் செய்ய மிகவும் சிரமமான நிலை ஏற்பட்டுள்ளது. மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டவுடன் மத்திய அலுலவகத்திற்கு மட்டும் 159 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க பிரேரனை உரிய வழிமுறையாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>அரசு தனது அ ரசாணை (நிலை) எண். 48 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மா.ந.6) துறை நாள் 22–05–2012ல் 18 பணியிடஙகள் மட்டும் அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மாநகராட்சி பணிவிதிகளின்படி ஒருஙகிணைக்கப்பட வேண்டிய பணியிடஙகளையும் ஒருஙகிணைத்து உத்தரவு வழஙகப்படவில்லை. எனவே போதிய பணியிடஙகள் தோற்றுவிக்கப்படாததால் ஐந்து கிராம ஊராட்சிகளின் கணக்குகளை இணைத்தல், சொத்துவரி, குடிநீர் வரி கேட்புகளை இணைத்தல், போன்ற பணிகள் மிகவும் கடினமான நிலையில் உள்ளது. மேலும் இம்மாநகராட்சியில் ஆணையர் மற்றும் நிர்வாக பொறியாளர் பணியிடத்தினை தவிர வேறு எந்த உயர் அலுவலர் பணியிடம் நிரப்பப்படாமல் உள்ளது. உதராணமாக நகராட்சியாக இருந்த போது உள்ள மேலாளர் பணியிடம், கணக்கர் பணியிடம், வருவாய் அலுவலர் பணியிடம், நகரமைப்பு அலுவலர் பணியிடம், உதவி நகரமைப்பு அலுவலர் பணியிடம், வருவாய் ஆய்வாளர்கள் பணியிடம், நகர்நல அலுவலர் பணியிடம் என அனைத்து பணியிடஙகளும் காலியாக உள்ளது.<br><br>தற்போது இம்மாநகராட்சி உதவியாளர்களே மேலாளர் பொறுப்பாகவும், கணக்கர் பொறுப்பாகவும், வருவாய் அலுவலர் பொறுப்பாகவும் பணியாற்றி வருகின்றனர். இம்மாநகராட்சி வருவாய் பிரிவில் எந்த உயர் அலுவலர்களும் இல்லாமல் ஒரு உதவியாளரின் பொறுப்பிலே இம்மாநகராட்சி தற்போது இயஙகி வருகிறது. அதே போன்று கணக்குபிரிவு, பொதுப் பரிவுகளும் இயஙகி வருகின்றன.<br><br>தற்போது அரசாணை (நிலை) எண். 48 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மா.ந.6) துறை நாள் 22–05–2012ல் புதியதாக 18 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, ஆறு மாதங்களுக்கு மேலாக காலியாக உள்ள 262 பணியிடங்களையும் நிரப்பிக் கொள்ள அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே 6 மாதங்களுக்கு மேல் தற்போது காலியாக உள்ள இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள 269 பணியிடங்கள் மாநகராட்சி பணிவிதிகளின்படி ஒருஙகிணைக்கப்பட வேண்டிய பணியிடங்களுடன் ஒருஙகிணைத்து பணியிடங்களை அனுமதிக்க அரசு பிரேரனை அனுப்பலாம். தற்போது இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள ஐந்து கிராம ஊராட்சிகளையும் இணைத்தப் பின்னர் மாநகராட்சியின் மொத்த வருவாயில் பணிக்குழுக்கான செலவினம் 49 சதவீதத்திற்கும் குறைவாக 45.48 சதவீதம் மட்டுமே உள்ளது. எனவே தற்போது 6 மாதங்களுக்கு மேலாக உள்ள பணியிடஙகளை மிக மிக அத்தியாவசியமானதாக | 212) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |

உள்ளதால் அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**6 மாதத்திற்கு மேல் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிக் கொள்ள அனுமதி வழஙக கேட்டல் தொடர்பான விபரஙகள்**

| வ. எண் | பணியின் பெயர் | ஏனுமதிக்கப்பட்ட பணியிடம் | தற்போது உள்ள பணியிடம் | மொத்தம் காலியாக உள்ள பணியிடம் | 6 மாதத்திற்கு மேல காலியாக உள்ள பணியிடம் | ஊதிய விகிதம் மற்றும் கிரேடு ஊதியம் | வருடாந்திர செலவினம் (ரூ லட்சத்தில்) | தேவைப்படும் பணியிடம் மற்றும் பணியிடம் நிரப்பபட வேண்டிய அவசியம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **தமிழ்நாடு மாநகராட்சி பொது பணி விதிகள் 1996ன் கீழ் உள்ள பணியிடங்கள்** | | | | | | | | |
| 1 | மேலாளர் | 1 | 0 | 1 | 1 | 9300– 34800 தர ஊதியம் 4800 | 3.18 | மாநகராட்சி பணி விதிகளின்படி மேலாளர் பணியிடம் கிடையாது எனவே அதற்கு இணையான நிர்வாக அலுவலர் பணியிடம் ஒன்றினை அனுமதிக்கலாம். மேலும் இம்மாநகராட்சி 25–10–11 முதல் முழுமையான மாநகராட்சியாக செல்பட்டு வருகிறது. மத்திய அலுவலகத்திற்கு இப்பணியிடம் மிகவும் அத்தியாவசியமானது ஆகும் |
| **தமிழ்நாடு மாநகராட்சி பொது சார்நிலைப் பணி விதிகள் 1996ன் கீழ் உள்ள பணியிடஙகள்** | | | | | | | | |
| 2 | வருவாய் அலுவலர் | 1 | 0 | 1 | 1 | 9300– 34800 தர ஊதியம் 4800 | 3.18 | மாநகராட்சி பணி விதிகளின்படி வருவாய் அலவலர் பணியிடம் கிடையாது எனவே அதற்கு இணையான உதவி வருவாய் அலுவலர் பணியிடம் ஒன்றினை அனுமதிக்கலாம். மேலும் இம்மாநகராட்சி 25–10–11 முதல் முழுமையான மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இம்மாநகராட்சி வருவாய் பிரிவில் வருவாய் அலுவலர் மற்றும் வருவாய் உதவியாளர் பணியிடங்கள் அனைத்தும் காலியாக உள்ளது. தற்போது உதவியாளர் நிலையிலேயே அனைத்து பணிகளையும் கவனித்து வரப்படுகிறது. எனவே இப்பணியிடம் மிகமிக அத்தியாவசியமானது ஆகும். |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | கணக்கர் | 1 | தற்போது இப்பணியித்தில உள்ள அலுவலர் அயா் பணியில் உள்ளார் | 1 | 1 | 9300–34800 தர ஊதியம் 4800 | 3.18 | மாநகராட்சி பணி விதிகளின்படி கணக்கு அலுவலர் பணியிடம் ஒன்று தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணியிடத்திற்கு அயற் பணியில் உள்ள கணக்கர் நியமனம் செய்யப்பட உள்ளார். எனவே இக்கணக்கர் பணியிடத்திற்கு இணையான கண்காணிப்பாளர் பணியிடம் ஒன்றினை அனுமதிக்கல்லாம். மேலும் இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகள் அனைத்தும் கிராம ஊராட்சிகள் ஆகும். அதிலிருந்து நிலையான பணியிடங்கள் எதுவும் இல்லாததால் பணிசுமை மிகவும் அதிகமாக உள்ளது எனவே இப்பணியிடத்தினை தோற்றுவிப்பது மிகவும் அவசியமாக உள்ளது. | | |
| | | 4 | வருவாய் ஆய்வாளர் | 3 | 0 | 3 | 2 | 5200–20200 தர ஊதியம் 2800 | 3.48 | மாநகராட்சி பணி விதிகளின்படி வருவாய் ஆய்வாளர் பணியிடம் கிடையாது. வருவாய் பிரிவிற்கு தற்போது கூடுதல் பணியிடங்கள் மிகவும் அத்தியாவசியமாக உள்ளது. எனவே இப்பணியிடத்தினை உதவியாளர் பணியிடமாக மாற்றம் செய்யலாம். இதில் 6 மாதத்திற்கு மேலான பணியிடம் இரண்டும் 6 மாதத்திற்கு குறைவான பணியிடம் ஒன்றும் காலியாக உள்ளது. வருவாய் உதவியாளர் என பணியிடம் இல்லாததால் மூன்று பணியிடத்தினையும் உதவியாளர் பணியிடமாக ஒருங்கிணைத்து காலியாக உள்ள பணியிடத்தினை அனுமதிக்கலாம். மண்டல அலுவலகத்திற்கு இவர்களை ஒதுக்கீடு செய்யலாம். | | |
| | | 5 | தட்டச்சர் | 3 | 2 | 1 | 1 | 5200–20200 தர ஊதியம் 2400 | 1.66 | பணிவிதிகளின்படி தட்டச்சர் பணியிடம் என கிடையாது. எனவே இப்பணியிடத்தினை இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடமாக காலியாக உள்ள பணியிடத்தினை அனுமதிக்கலாம். தற்போது உள்ள இரண்டு தட்டச்சர் பணியிடத்தினை இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடத்துடன் ஒருங்கிணைத்து காலியாக உள்ள பணியிடத்தினையும் அனுமதித்து உத்தரவு வழங்கலாம். | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | வருவாய் உதவியாளர் | 30 | 29 | 1 | 1 | 5200– 20200 தர ஊதியம் 2400 | 1.66 | மாநகராட்சி பணிவிதிகளின்படி வரிவசூலிப்பவர் பணியிடம் உள்ளது. வருவாய் உதவியாளர் என பணியிடம் இல்லை. தற்போது இம்மாநகராட்சி 60 வார்டுகளுடன் இயஙகிவருகிறது. மேலும் இத்துடன் இணைக்கப்பட்ட கிராம ஊராட்சிகள் மிகவும் தொலைவில் உள்ளதால் வரிவசூல் தொடர்பான பணியிடங்கள் கூடுதலாக தேவையாக உள்ளது. எனவே இந்த 30 பணியிடங்களையும் வரிவசூலிப்பர் பணியிடமாக ஒருஙகிணைத்து காலியாக உள்ள ஒரு பணியிடத்தினையும் அனுமதிக்கலாம். | |
| | | 7 | துப்புரவு ஆய்வாளர் | 14 | 6 | 8 | 8 | 9300 – 34800 தர ஊதியம் 4200 | 24.26 | இம்மாநகராட்சி தற்போது 60 வார்டுகளாக பிரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் நடைபெற்று வருகிறது. நகராட்சியாக இருந்த போது அனுமதிக்கப்பட்ட பணியிடத்திலேயே 50 சதவீதத்திற்கு மேலாக இப்பணியிடம் காலியாக உள்ளது. எனவே இம்மாநகரட்சியின் துப்புரவு பணிகள், பிறப்பு இறப்பு பதியும் பணிகள் என துப்புரவு பிரிவு பணிகள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. மாநகராட்சி பணிவிதிகளில் துப்புரவு ஆய்வாளர் பணியிடம் Conservency Inspector என்று உள்ளது எனவே இப்பணியிடஙகளை Conservency Inspector என்ற பணியிடமாக ஒருஙகினைத்து காலியாக உள்ள 8 (எட்டு) பணியிடங்களை அனுமதிக்கலாம். | |
| | | 8 | துப்புரவு மேற்பார்வையாளர் | 28 | 2 | 26 | 26 | 4800 – 10000 தர ஊதியம் 1650 | 30.72 | இம்மாநகராட்சி 5 கிராம ஊராடசிகளுடன் இணைக்கப்பட்டு 60 வார்டுகள் அடஙகிய 13 சுகாதார மண்டலங்களாக பிரிக்கப்பட்டு சுகாதாரப் பணிகள் நடைபெற்று வருகிறது. தூத்துக்குடி நகராட்சியாக இருந்தபோது அனுமதிக்கப்பட்ட துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடங்கள் 14ல் தற்போது 2 பணியிடங்கள் மட்டுமே உள்ளது. 60 வார்டுகளின் பணிகளை 2 மேற்பார்வையாளர்களை கொண்டு கவனிக்க இயலாத நிலை எனவே இப்பணியிடம் மிக மிக அத்தியாவசியமானது ஆகும். இப்பணியிடத்தினை | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | Conservency Supervisor பணியிடமாக ஒருங்கினைத்து காலியாக உள்ள 12 பணியிடத்தினை அனுமதித்து உத்தரவு வழுங்கலாம். | |
| | | **தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் பணி விதிகள் 1996ன் கீழ் உள்ள பணியிடஙகள்** | | | | | | | | |
| | | 9 | நகரமைப்பு அலுவலர் | 1 | 0 | 1 | 1 | 15600– 39100 தர ஊதியம் 6600 | 4.88 | மாநகராட்சி பணிவிதிகளின்படி நகரமைப்பு அலுவலர் பணியிடம் கிடையாது. இப்பணியிடம் செயற் பொறியாளர் (பிளானிங்) என்று ஏற்படுத்தப்பட்டு இருக்க வேண்டும். ஏற்கனவே இருந்த செயற் பொறியாளர் பணியிடம் மாநகர் பொறியாளர் பணியிடமாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது செயற் பொறியாளர் பணியிடம் இல்லை. எனவே செயற் பொறியாளர் பணியிடமாக இப்பணியிடத்தினை அனுமதிக்கலாம். மாநகர் பொறியாளர் பணியிடம் ஒன்று மட்டும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எனவே திட்டப்பணிகள், மற்றும் மேம்பாட்டு பணிகள் அனைத்தையும் மேற்பார்வை செய்து கவனிக்க இப்பணியிடம் மிகவும் அத்தியாவசியமானது ஆகும். நகர் வடிவமைப்பு பணிகளையும் கவனிக்க வேண்டியதிருப்பதால் இப்பணியிடம் மிகவும் அத்தியாவசியமானது ஆகும். எனவே காலியாக உள்ள இந்த ஒரு பணியிடத்தினை செயற் பொறியாளர் பணியிடமாக ஒருஙகிணைத்து அனுமதி வழஙகலாம். |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 10 | உதவி நகரமைப்பு அலுவலர் | 1 | 0 | 1 | 1 | 15600 – 39100 தர ஊதியம் 5400 | 4.68 | உதவி நகரமைப்பு அலுவலர் என மாநகராட்சி பணிவிதிகளில் பணியிடம் இல்லை. நகரமைப்பு பணி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணியுடன் இணைக்கப்பட வேண்டும். எனவே இப்பணியிடத்தினை உதவி செயற் பொறியாளர் பணியிடமாக அனுமதிக்கலாம். இம்மாநகராட்சியில் தற்போது பாதாள சாக்கடை திட்டப் பணிகள், பக்கிள் ஓடை மேம்பாட்டு பணிகள், தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட பணிகள் மற்றும் 284 கோடி மதிப்பீட்டில் 4வது குடிநீர் பைப் லைன் பணிகள் நடைபெற உள்ளது. எனவே இப்பணியிடம் மிகவும் அத்தியாவசியமானது ஆகும். இப்பணியிடத்தினை உதவி செயற் பொறியாளர் பணியிடமாக ஒருங்கிணைத்து காலியாக உள்ள ஒரு பணியிடத்தினை அனுமதிக்கலாம். | |
| | | **தமிழ்நாடு நகராட்சி பொறியியல் சார்நிலைப் பணி விதி 1996ன் கீழ் உள்ள பணியிடங்கள்** | | | | | | | | | |
| | | 11 | இளநிலைப் பொறியாளர் (பணிமனை) | 1 | 0 | 1 | 1 | 9300 – 34800 தர ஊதியம் 4400 | 3.01 | இம்மாநகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக இருந்தபோதே வாகன பராமரிப்பு பணிமனை பராமரிக்கப்பட்டு வந்தது. தற்போது இப்பணினை மின் கண்காணிப்பாளர் ஒருவர் கூடுதலாக கவனித்து வருகிறார். இம்மாநகராட்சியில் தற்போது 25 வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மாநகராட்சியாக அறிவிக்கப்பட்ட பின்னர் குப்பை அகற்ற, கழிவுநீர் அகற்ற, குடிநீர் விநியோகம் என வாகனங்கள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே வாகன பராமரிப்பு மிகவும் அத்தியாவசியமாக உள்ளது. மேலும் இம்மாநகராட்சியில் தற்போது இரண்டு இளநிலை பொறியாளர்கள் மட்டுமே உள்ளனர். எனவே இப்பணியிடம் மிகவும் அத்தியாவசியமானது ஆகும். இப்பணியிடத்தினை அனுமதித்து காலியாக உள்ள ஒரு பணியிடத்தினை அனுமதிக்கலாம். | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 12 | செயல்திறன் உதவியாளர் நிலை–1 | 17 | 13 | 4 | 4 | 5200 – 20200 தர ஊதியம் 2600 | 7.14 | இம்மாநகராட்சியாக அறிவிக்கப்பட்ட பின்னர் 5 கிராம ஊராட்சிகள் இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகளில் நிரந்தர பணியிடங்கள் எதுவும் கிடையாது. ஏற்கனவே இம்மாநகரட்சியின் குடிநீர் விநியோக பணி, தெரு விளக்கு பணி, மண்டல அலுவலகங்கள் போன்றவற்றிக்கு ஏராளமான பணியிடங்கள் தேவையானதாக உள்ளது. எனவே இப்பணியிடங்கள் மிகவும் அத்தியாவசியமானது ஆகும். இப்பணியிடத்தினை அனுமதித்து காலியாக உள்ள 4 பணியிடங்களை அனுமதிக்கலாம். | |
| | | 13 | செயல்திறன் உதவியாளர் நிலை – 2 / செயல்திறனற்ற பணியாளர்கள் (பொறியியல் பிரிவு) | 80 | 70 | 10 | 10 | 5200 – 20200 தர ஊதியம் 2000 | 16.66 | இம்மாநகராட்சி 25–11–2011ம் முதல் 5 கிராம ஊராட்சிகளையும் இணைத்து 60 வார்டுகள் அடங்கிய முழுமையான மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. குடிநீர் விநியோக பணி, தெருவிளக்கு பணி, சாலை பணிகள், கவனிக்க பணிகளின் எண்ணிக்கை மிகமிக குறைவாக உள்ளது.. தற்போது கூடுதலாக இணைக்கப்பட்ட இடங்களுக்கு தனியாக பணியாளர்கள் அனுப்ப இயலாத நிலை உள்ளது. மேலும் அரசாணை எண். 338 நிதி (ஊதியக்குழு) துறை நாள் 26–08–2010ல் செயல்திறனற்ற பணியிடங்கள் நிரப்பக் கூடாது என்றும். இனி வருங்காலங்களில் செயல்திறன் உதவியாளர் நிலை–2 பணியிடங்களே நிரப்பப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது 6 மாதங்களுக்கு மேல் காலியாக உள்ள செயல்திறனற்ற பணியாளர் பணியிடங்களையும் ஒருங்கிணைத்து காலியாக உள்ள 10 பணியிடங்களை அனுமதிக்கலாம். | |
| | | **தமிழ்நாடு மாநகராட்சி பொது சுகாதார பணி விதிகள் 1996ன் கீழ் உள்ள பணியிடங்கள்** | | | | | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 14 | மாநகர் நல அலுவலர் | 1 | 0 | 1 | 1 | | | இப்பணியிடத்தில் இணை இயக்குநர் தகுதியுள்ள பொது சுகாதார துறை அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும். தனியாக பிரேரனை இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, சென்னைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| | | 15 | மருத்துவ அலவலர் | 5 | 4 | 1 | 1 | 15600 – 39100 தர ஊதியம் 5400 | 4.58 | இம்மாநகராட்சியில் தற்போது 3 மகப்பேறு மையத்துடன் 5வது இந்திய மக்கள் தொகை திட்ட மையங்களும் இணைக்கப்பட்டு செயல்புரிந்து வருகிறது. மருத்துவ அலுவலர் பணியிடம் இல்லாததால் இப்பணி மற்றொரு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே இந்த மருத்துவ அலுவலர் பணியிடத்தினை அனுமதித்து தனியாக மருத்துவ மையம் இயங்க அனுமதிக்கலாம். காலியாக உள்ள ஒரு பணியிடத்தினை அனுமதிக்கலாம் | |
| | | **தமிழ்நாடு மாநகராட்சி பொது சுகாதார சார்நிலைப் பணி விதிகள் 1996ன் கீழ் உள்ள பணியிடங்கள்** | | | | | | | | | |
| | | 16 | பகுதி சுகாதார செவிலியர் | 4 | 3 | 1 | 1 | 9300 – 34800 தர ஊதியம் 4200 | 3.00 | இம்மாநகராட்சியில் தற்போது 3 மகப்பேறு மையத்துடன் 5வது இந்திய மக்கள் தொகை திட்ட மையங்களும் இணைக்கப்பட்டு செயல்புரிந்து வருகிறது. மருத்துவ அலுவலர் மற்றும் பகுதி சுகாதார செவிலியர் பணியிடம் இல்லாததால் இப்பணி மற்றொரு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே இந்த பகுதி சுகாதார செவிலியர் பணியிடத்தினை அனுமதித்து தனியாக மருத்துவ மையம் இயங்க அனுமதிக்கலாம். காலியாக உள்ள ஒரு பணியிடத்தினை அனுமதிக்கலாம் | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 17 | நகர சுகாதார செவிலியர் (நகர சுகாதார செவிலியர் – 22 + மகப்பேறு உதவியாளர் – 18) | 40 | 23 | 17 | 15 | 9300 – 34800 தர ஊதியம் 4200 | 45.50 | இம்மாநகராட்சியில் தற்போது 3<br>மகப்பேறு மையத்துடன் 5வது<br>இந்திய மக்கள் தொகை திட்ட<br>மையங்களும் இணைக்கப்பட்டு<br>செயல்புரிந்து வருகிறது.<br>மருத்துவ அலுவலர், பகுதி<br>சுகாதார செவிலியர் பணியிடம்<br>மற்றும் நகர சுகாதார செவிலியர்<br>பணியிடங்கள் அதிக அளவில்<br>காலியாக இருந்ததால்<br>மற்றொரு மையத்துடன்<br>இணைக்கப்பட்டுள்ளது.<br>எனவே ஏற்கனவே<br>இணைக்கப்பட்ட மையங்களை<br>தனியாக அமைத்து சுகாதார<br>பணியினை மேற் கொள்ள<br>இப்பணியிடங்கள் மிகவும்<br>அத்தியாவசியமானது ஆகும்<br>எனவே மகப்பேறு உதவியாளர்<br>பணியிடங்களை<br>ஒருங்கிணைத்து<br>இப்பணியிடங்களை நகர<br>சுகாதார செவிலியர்<br>பணியிடங்களாக<br>அனுமதிக்கலாம். காலியாக<br>உள்ள 15 பணியிடங்களையும்<br>அனுமதிக்கலாம். |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **தமிழ்நாடு மாநகராட்சி அடிப்படை பணிவிதிகள் 1996ன் கீழ் உள்ள பணியிடங்கள்** | | | | | | | | |
| 18 | செய;ல்திற னற்ற பணியாளர் (பொது சுகாதாரம் – மலேரியா தலைமை பணியாளர் மற்றும் மலேரியா பணியாளர் கள்) | 60 | 33 | 27 | 24 | 5200 – 20200 தர ஊதியம் 1900 | 41.76 | இம்மாநகராட்சி ப<br>கடற்கரை ப<br>தரையின் நீர்மட்டம்<br>உள்ளது. ஏன<br>காலங்களில் வெள்ள<br>ஏற்படும் போதும்.<br>தொழில் நிறைந்த<br>இருப்பதாலும், கொச<br>தொல்லைகள்<br>என்பதால் ந<br>இருந்தபோதே 60<br>பணியாளர்கள் பண<br>தோற்றுவிக்கப்பட்டது<br>தற்போது 33 பண<br>மட்டுமே உள்ளது.<br>ச.கி.மீட்டர் பரப்பு<br>90.66 ச.கி.மீட்டர்<br>உயர்ந்துள்ளது.<br>தொகையும்<br>பகுதிகளுடன்<br>அதிகமாகி உள்ளது<br>இப்பணியிடங்கள்<br>அத்தியாவசியமானது<br>மாநகராட்சி பணி<br>மலேரியா பண<br>இல்லாததால்<br>இப்பணியிடங்களை<br>செயல்திறனற்ற<br>(பொது சுகாதாரம்<br>ஒருங்கிணைத்து<br>உத்தரவு வழங்கலாம் |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 19 | பெண் உதவியாளர் | 3 | 2 | 1 | 1 | 4800 – 10000 தர ஊதியம் 1300 | 1.44 | இப்பணியிடம் மகப்பேறு மையத்திற்கு மிகவும் அத்தியாவசியமான பணியிடமாகும். தற்போது இயங்கி வரும் மூன்று மையத்தில் ஒரு மையத்தில் மட்டுமே பெண் உதவியாளர் இல்லாமல் உள்ளது. எனவே காலியாக உள்ள ஒரு பணியிடத்தினை அனுமதித்து உத்தரவு வழங்கலாம். | |
| | | 20 | துலக்குநர் (வாகனம்) | 7 | 3 | 4 | 4 | 4800 – 10000 தர ஊதியம் 1300 | 5.31 | இம்மாநகராட்சியில் தற்போது மாநகராட்சி பொது சுகாதார வாகனம் 10 எண்ணிக்கை உள்ளது. நகராட்சியாக இருந்தபோது 7 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டது. தற்போது 3 பணியிடங்கள் மட்டுமே உள்ளது. மீதமுள்ள வாகனங்களில் துலக்குனர் இல்லாமல் உள்ளது. இப்பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டால் துப்புரவு வாகன பணிகளுக்கு மிகவும் வசதியாக இருக்கும். எனவே காலியாக உள்ள 4 (நான்கு) பணியிடத்தினை அனுமதிக்கலாம்.. | |
| | | 21 | துப்புரவு பணியாளர்கள் | 434 | 267 | 167 | 147 | 4800 – 10000 தர ஊதியம் 1300 | 196.95 | இம்மாநகரட்சியுடன் 5 கிராம ஊராட்சிகளையும் சேர்த்து 25–10–2011 முதல் முழுமையான மாநகராட்சியாக 60 வார்டுகளுடன் செயல்பட்டு வருகிறது. நகராட்சியாக இருந்தபோது அரசாணை எண். 101ன்படி துப்புரவு பணியாளர்கள் 1000 பேர் அனுமதிக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் 434 பணியிடங்களே அனுமதிக்கப்பட்டுள்ளது. அதிலும் தற்போது 267 பணியிடங்கள் மட்டுமே உள்ளது. 20 வார்டுகள் தனியார் மூலம் குப்பை அகற்றப்பட்டாலும் மீதமுள்ள 40 வார்டுகளுக்கு துப்புரவு பணியாளர்கள் பணியிடம் மிக மிக குறைவானது ஆகும். இதனால் துப்புரவு பணி மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே 167 துப்புரவு பணியாளர்கள் பணியிடம் மிக மிக அத்தியாவசியமானது ஆகும். எனவே இப்பணியிடத்தினை அனுமதித்து உத்தரவு வழங்கலாம். | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22 | அலுவலக உதவியாளர் | 19 | 12 | 7 | 4 | 4800 – 10000 தர ஊதியம் 1300 | 5.55 | இம்மாநகராட்சியில் பொதுப் பிரிவு, வருவாய் பிரிவு, கணக்குப் பிரிவு, சுகாதாரப் பிரிவு, பொறியில் பிரிவு, நீதிமன்றம், போன்ற துறைகள் உள்ளன. அனைத்து துறைகளிலும் ஏராளமான கோப்புகள் நடவடிக்கையில் உள்ளது. எனவே ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு துறை தலைவருக்கும் அலுவலக உதவியாளர் பணியிடம் மிகவும் அத்தியாவசியமானது ஆகும். தற்போது இப்பணியிடங்கள் செயல்திறனற்ற பணியாளர்களை கொண்டு கவனிக்கப்படுகீறது.. இதனால் பொறியியல் பணிகள் மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே இப்பணியிடங்கள் மிகவும் அத்தியாவசியமானது ஆகும். காலியாக உள்ள 4 பணியிடங்களை அனுமதிக்கலாம். | |
| 23 | மகப்பேறு ஆயா | 14 | 1 | 13 | 13 | 4800 – 10000 தர ஊதியம் 1300 | 18.04 | இம்மாநகராட்சியில் தற்போது 3 மகப்பேறு மையத்துடன் 5வது இந்திய மக்கள் தொகை திட்ட மையங்களும் இணைக்கப்பட்டு செயல்புரிந்து வருகிறது. மருத்துவ அலுவலர், பகுதி சுகாதார செவிலியர் பணியிடம், நகர சுகாதார செவிலியர், மகப்பேறு உதவியாளர் மற்றும் மகப்பேறு ஆயா பணியிடங்கள் அதிக அளவில் காலியாக இருந்ததால் மற்றொரு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே இணைக்கப்பட்ட மையங்களை தனியாக அமைத்து சுகாதார பணியினை மேற் கொள்ள இப்பணியிடங்கள் மிகவும் அத்தியாவசியமானது ஆகும் எனவே மகப்பேறு ஆயா பணியிடங்களை அனுமதிக்கலாம். காலியாக உள்ள 13 பணியிடங்களையும் அனுமதிக்கலாம். | |
| | **மொத்தம்** | **768** | **470** | **298** | **269** | | **429.82** | **(வருடாந்திர செலவினம்)** | |

**அலுவலக குறிப்பு :**

6 மாதங்களுக்கு மேலாக காலியாக உள்ள பணியிடங்களை அனுமதிக்கலாம். பணியிடங்களை அனுமதி வழங்க கேட்டு பிரேரனையினை அரசுக்கு உரிய வழிமுறையாக அனுப்பலாம்.

சி1/21375/2008

| | | |
|---|---|---|
| | **213.** மேயரின் குறிப்பு | குறிப்பு: மாமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளை ஏற்று தூத்துக்குடி மாநகராட்சியில் நடைபெறவுள்ள பாதாளச் சாக்கடைப் பணிகள் மற்றும் 4வது பைப் லைன் போன்ற குடிநீர்ப் பணிகள் இன்னபிற மாநகராட்சி அலுவலுக்குள் வரும் அனைத்து பணிகளும் இனிமேல் மாநகராட்சி மூலமே நடைபெற வேண்டும். தற்போது TWAD Board ஆல் ஏற்பட்டுள்ள தாமத நிலையால் இம்முடிவு எடுக்கப்படுகிறது என்று மன்றம் தீர்மானிக்கிறது. |